**08.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

**சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இன்று (08.03.2020) மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்களில் மொத்தம் 550 நபர்கள் பயனடைந்தனர்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், உடல்நலம் மற்றும் உயிரியல் தொழில்துறை அமைப்புடன் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மெட்ரோ இரயில் பயணிகள், பொதுமக்கள் மற்றும் மகளிர் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் இன்று (08.03.2020) மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்றது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் இன்று (08.03.2020) வடபழனி, செனாய் நகர் மெட்ரோ, விமான நிலைய மெட்ரோ, மற்றும் சென்ட்ரல் மெட்ரோ ஆகிய 4 மெட்ரோ இரயில் நிலையங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் நடைபெற்றன. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள், மகளிர் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் காலையில் 280 பேரும் மாலையில் 270 பேர் உட்பட சுமார் 550 பேர் இந்த முகாமில் இன்று பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில்

பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை),
இரத்த அழுத்தம்,
சீரற்ற இரத்த சர்க்கரை, மற்றும்
ஆலோசனைகள் வழங்கப்பட்டது.